# கால்நடை வளர்ப்பு





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கடந்தகால வினாக்கள்

## 2019

### பகுதி - 1

**1. பின்வருவனவற்றில் யாழ்குடாநாட்டில் வளர்க்கக்கூடிய கறவைப் பசுவர்க்கம் எது?**

1. பிறீசியன் 2. அயர்சயர் 3. சிவப்பச்சிந்தி 4. ஜேர்சி

**2. கால்நடை வளர்ப்பில் புரதமூலமாக விலங்குகளுக்கு வழங்கப்படும் உணவாக அமைவது**

1. சோளம் 2. புல் 3. பிண்ணாக்கு 4. அரிசித்தவிடு

**3. மாடு வளர்ப்பு முறைகளுடன் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது**

1. தீவிரமுறை வளர்ப்பின் போது திறந்த வளர்ப்பினை விடகுறைவான பால் விளைச்சல் கிடைக்கும்
2. திறந்தவெளி முறையில் பசுக்கள் வளர்க்கப்படும்போதுஇரவில்மட்டும்தங்குமனைவழங்கப்படும்
3. தலைக்குதலைமுறைவாலுக்குவால்முறைஆகியனஅரைத்தீவிரமுறைமாட்டுவளர்ப்புமுறையாகும்
4. சுயாதீனமுறையில்பசுக்கள்கட்டிவைக்கப்படாதுமனையில்சுயாதீனமாகவளர்க்கப்படும்

**4. பின்வருவனவற்றுள் சரியான கூற்றை தெரிக**

1. மாடுகளுக்குஏற்படும்கால்வாய்நோய்ஒருபற்றீரியாநோயாகும்
2. மாடுகளுக்குஏற்படும்மடியழற்சிநோய்ஒருவைரசுநோயாகும்
3. கோழிகளுக்குஏற்படும்ரணிக்கட்நோய்வைரசுநோயாகும்
4. கோழிகளுக்குஏற்படும்கொக்சிடியோசிஸ்நோய்பற்றீரியாநோயாகும்

**5. பசுக்களின் வேட்கை வட்டக்காலம் நியம கறவைக்காலம் நாட்களில் முறையே**

1. 21, 305 2. 285, 305 3. 28, 285 4. 305, 285

### பகுதி - 11

**6. திறந்த வெளிவளர்ப்பு முறையில் பண்ணை விலங்குகளை வளர்ப்பதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 குறிப்பிடுக?**

**7. கால்நடை வளர்ப்பில் பண்ணை விலங்குகளை மனைகளினுள் வளர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் 4 தருக?**

**8. ஒருநாள் வயது பருவபுறோயிலர் கோழிக்குஞ்சுகளை கொள்வனவு செய்யம்போது கவனிக்கவேண்டிய விடயங்கள 4 எழுதுக?**

தொகுப்பு :- கே.திபாகரன், கே.இளங்குமரன், கே.குமுதினி, பி.பாலசுதன் (வடமாகாண ஆசிரியர்கள்)

கணினி வடிவமைப்பு :- திரு.ச.சசிஸ்குமார் ISA—கணிணி வளவாளர் (ZICTEC - தென்மராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

9. கோழிவளர்ப்பில் கனகூளத்தை உலர்வாகபேணுவதற்கு நேர்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் 3 குறிப்பிடுக?

10. பசுக்கன்று பிறந்தவுடன் அதற்கு செய்யவேண்டிய பராமரிப்பு செயற்பாடுகள் இரண்டை குறிப்பிடுக?

11. பசுக்களுக்கு ஏற்படும் பாற்காற்சல் நோய்க்கான காரணத்தை குறிப்பிட்டு அதன்நோய் அறிகுறிகள் இரண்டை எழுதுக?

## 2018

1. கோழிகளில் கொக்சிடியோசிஸ் என்னும் நோயை உருவாக்க காரணமான நோயாக்கி

1.பற்றீரியா 2. புறட்டசோவா 3. நெமற்றோடு 4. வைரசு

2. கருவுற்ற பசு ஒன்றில் பால்க்கறவை நிறுத்தும் காலம் ஆரம்பிப்பது

1. கன்று ஈனுவதற்கு 12 கிழமைகள் முன்பதாக
2. கன்று ஈனுவதற்கு 10 கிழமைகள் முன்பதாக
3. கன்று ஈனுவதற்கு 08 கிழமைகள் முன்பதாக
4. கன்று ஈனுவதற்கு 04 கிழமைகள் முன்பதாக

3. ஒரு சுகதேகியான கறவைப்பசு வேட்கை அறிகுறிகளை எவ்வளவு காலத்திற்கு ஒருதடைவ வெளிக்காட்டும்

1. 14 - 17 2. 18 - 21 3. 24 - 27 4. 28 - 30

4. சகிவாலுடன் அல்லது சிந்தியுடன் ஜேர்சியை கலப்பின பிறப்பாக்கம் செய்துபெறப்படும் கால்நடை இனம்

1.பீவ்மாஸடர் 2. நீலிரவி 3. சூர்த்தி 4. ஆஸ்திரேலியன்கறவைபசு (AMZ )

5. கன்று ஈன்றவுடன் முதன்முதலாக செய்யவேண்டிய செயற்பாடு

1. கடம்புப்பாலை கன்று குடிக்கவிடவேண்டும்
2. தொப்புள் கொடியை வெட்டி வெட்டிய இடத்தில் அயடீன்பூசுதல்
3. முக்கிலும் வாயிலுமுள்ள சளியத் துடைத்துவிடல் வேண்டும்
4. கன்றினை சிறிதளவு நீரை குடிக்கவிடவேண்டும்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

6) கீழேதரப்பட்டுள்ள அட்டவணையின் எந்தவரிசையில் இந்தியன் மற்றும் ஐரோப்பிய கால்நடை வர்க்கங்களைப் பற்றிய பொதுவான இயல்புகள் சரியாக தரப்பட்டுள்ளது?

| இல | இந்திய வர்க்கம் | ஐரோப்பிய வர்க்கம் |
|---|---|---|
| 1 | தோல்மடிப்பு அதிகமாக வளர்ந்திருக்கும் | உடலுடன் தொல்இறுக்கமாக இணைக்கப்பட்டிருக்கம் |
| 2 | ஊடலின் பின்பக்கம் வட்டவடிவமாக இருக்கம் | ஏரி சிறப்பாக வளர்ந்திருக்கும் |
| 3 | ஒப்பீட்டளவில் சிறியதாக இருக்கும் | தோல் இளக்கமாக வளர்ந்திருக்கும் |
| 4 | பால் உற்பத்தி ஒப்பிட்டளவில் அதிகமாகும் | மயிர்கள் நீளமானதாக இருக்கும் |

7. கோழி வளர்ப்பு முகாமைத்துவத்தில் கனகூள முறையினை பயன்படுத்துவதனாலான 3 அனுகூலங்களை தருக?

8. பண்ணை விலங்குகளுக்கு ஓர் இல்லம் ஸ்தாபிக்கம்போது கவனத்தில் எடுக்கவேண்டிய 3 விடயங்களை குறிப்பிடுக?

9. மடியழற்சியினால் தொற்றுக்கு உட்பட்ட முலையில் ஏற்படும் இரண்டு மாற்றங்களை தருக?

10. மடியழற்சியால் பாதிக்கப்பட்ட பசுவிலிருந்து பெறப்பட்டபாலில் ஏற்படும் 2 மாற்றங்களை தருக?

11. மடியழற்சியை கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய 2 உத்திகளை குறிப்பிடுக?



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2017

1. பாலைப் பெறும்நோக்கில் இலங்கையில் வளர்க்கப்படும் இந்திய கறவை மாட்டுவர்க்கம்

   1. ஜேர்சி  2. பீறிசியன்  3. சிந்தி  4. அயர்சயர்

2. மிகவிரைவாக பரவுகின்றனவும் கட்டுப்படுத்துவதற்கு கடினமானதுமான நோய்களே கொள்ளைநோய்கள் எனப்படும் இலங்கையில் காணப்படும் பிரதானமாட்டுக் கொள்ளைநோய்

   1. பாற்காய்ச்சல்  3. தொண்டையடைப்பான்
   2. மடியழற்சி  4. உண்ணிக்காய்ச்சல்

3. பசுவின் வேட்கை வட்டக்காலம் நாட்களில்

   1. 21  2. 30  3. 285  4. 305

4. விலங்குகளுக்கு வழங்கப்படும் உணவில் அடங்கியிருக் வேண்டிய பிரதான போசணைப் பொருட்களில் விலங்குகளில் வளர்ச்சி மற்றும் தேய்வடைந்த இழையங்களை புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு முக்கியமாக அமையும் போசணைப் பொருள்?

   1. புரதம்  2. காபோவைதரேற்று  3. இலிப்பிட்டு  4. விற்றமின்

5. விலங்குகளுக்கான உணவுப்பங்கீட்டை தயாரிக்கும்போது புரதத்தை வழங்கவென பயன்படுத்தப்படும் உணவுக்கூறு

   1. தேங்காய்ப்பிண்ணாக்கு  2. சிப்பித்தூள்
   3. சோளம்  4. அரிசித்தவிடு

6. விலங்கு உணவுகளை ஐதுத்தீன் செறிவுத்தீன் எனபிரதானமாக இரண்டாக வகைப்படுத்தலாம் மாடுகளுக்கு வழங்கத்தக்க செறிவுத்தீன்

   1. குளிகாப்புத்தீன்  2. வைக்கொல்  3. புல்  4. பிண்ணாக்கு

7. மாட்டுத் தொழுவத்திற்கென இடத்தை தெரிவுசெய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக?

8. மாடுவளர்ப்பில் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் என்றால் என்ன?

9) செயற்கைமுறைச் சினைப்படுத்லின் அனுகூலங்கள் 3 எழுதுக?

10. கனகூளமுறையில் கோழிவளர்ப்பை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் கனகூள பதார்த்தத்தின் காணப்பட வேண்டிய இயல்புள் 3 குறிப்பிடுக

தொகுப்பு :- கே.திபாகரன், கே.இளங்குமரன், கே.குமுதினி, பி.பாலசுதன் (வடமாகாண ஆசிரியர்கள்)
கணினி வடிவமைப்பு :- திரு.ச.சசிஸ்குமார் ISA—கணிணி வளவாளர் (ZICTEC - தென்மராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2016

1. பின்வரும் கறவைப் பசு வர்க்கங்களின் சிறப்பான பராமரிப்பின் கீழ் மிக அதிக பாலுற்பத்தியைத் தரும்பசுவர்க்கம்எது?

1. சிவப்புச்சிந்தி 2. ஜேர்சி 3. பிறீசியன் 4. சகிவால்

2. இலங்கையில் வளர்க்கப்படும் நெற்றிகால்களின் அடிப்பகுதிவால் ஆகியவற்றில் வெண்ணிறத்தை கொண்டதும் வெளிநாட்டை பிறப்பிடமாக கொண்டதுமான எருமை-மாட்டுவர்க்கம்?

1. முறா 2. சூர்த்தி 3. நீலிரவி 4. அயர்சயர்

3. தூங்கற்தன்மை கொண்டனவாகவும் கூட்டமாகவும் காணப்பட்ட கோழிகளின் குதத்தை சுற்றிவர வெண்ணிறக்கழிவுகள் ஒட்டி இருந்ததை அவதானிக்க முடிந்தது இந்தகோழிகளுக்கு ஏற்பட்டுள்ளநோயாக அமைவது?

1. கொக்சிடியோசிஸ் 2. புள்ளோரம்
3. ரணிக்கட் 4. வட்டப்புழுதொற்று

4. புறோயிலர் கோழி வளர்ப்பின்போது ஒரு கோழிக்குவழங்கபட வேண்டிய இடவசதி

1. ½ சதுரஅடி 2. 1 சதுரஅடி 3. 2 சதுரஅடி . 3 சதுரஅடி

5. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ள 6 கால்நடை வளர்ப்பு வலயங்களில் நான்கைக் குறிப்பிடுக?

6. பசு ஒன்றினால் வெளிக்காட்டப்படும் வேட்கை அறிகுறிகள் 3 குறிப்பிடுக?

7. குஞ்சுவதியினுள், கோழிக்குஞ்சுகள் பரந்து காணப்படும் அதனுள் நிலவும் வெப்பநிலை பற்றி எம்மால் உய்த்தறிய முடியும் நிலக்குஞ்சுவதியினுள் சிறப்பான அளவு குறைந்தளவு, கூடிய அளவு வெப்பநிலை நிலவும்போது குஞ்சு வதியினுள் கோழிக் குஞ்சுகள் பரந்து காணப்படும் வித்ததை வரிப்படங்களுடன் விளக்குக?

தொகுப்பு :- கே.திபாகரன், கே.இளங்குமரன், கே.குமுதினி, பி.பாலசுதன் (வடமாகாண ஆசிரியர்கள்)
கணினி வடிவமைப்பு :- திரு.ச.சசிஸ்குமார் ISA—கணிணி வளவாளர் (ZICTEC - தென்மராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk